www.Padasalai.Net

**பள்ளிக் கல்வித்துறை**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர்,**
**பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**
**சென்னை – 600006.**

**ந.க.எண்.2183/ ஆ8 / கலைத்திருவிழா/ ஒபக/ 2024, நாள்: 09.08.2024**

பொருள்: பள்ளிக் கல்வி – **2024–25** – கல்வி சாரா செயல்பாடுகள் – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் **"கலைத்திருவிழா"** போட்டிகள் நடத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் – சார்ந்து.

பார்வை: 2024–25 ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் க ல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 24.06.2024

*************

2024–25 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்** அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

**"6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களின் கலைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத்திருவிழா நடைபெற்று வருகிறது. அதனைத் தொடர்ந்து இக்கல்வியாண்டு முதல் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களும் பங்கேற்கும் வகையில் கலைத்திருவிழா நடத்தப்படும்".**

மேற்கண்ட அறிவிப்பின்படி, 2022 –23 ஆம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள பல்வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்தி மாணவர்களின் கலைத் திறன்களை வெளிகொணரும் விதமாக, பள்ளிக் கல்வி செயல்பாடுகளின் ஒரு பகுதியாக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு கலை சார்ந்த பயிற்சிகள் கலை அரங்க செயல்பாடுகள் மூலம் வழங்கப்பட்டு, 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு, பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாநில அளவில் கலையரசன், கலையரசி பட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

www.Padasalai.Net

அதனைத் தொடர்ந்து, 2023-24 ஆம் ஆண்டில் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாநில அளவில் கலையரசன், கலையரசி பட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்** அவர்களால் விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அதேபோன்று அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கென்று தனியாக பள்ளி, வட்டாரம் மற்றும் மாவட்டம் அளவில் கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி 2024-25 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் **தனித்தனியே கலைத்திருவிழா போட்டிகள்** நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**கலைத்திருவிழா 2024-25**

மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமையை வெளிக்கொணரவும், நடைமுறையில் உள்ள கலை மரபுகள் பற்றி அவர்களுக்குக் கற்பிக்கவும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கலை வடிவங்களில் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தவும் கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு இக்கலைத்திருவிழா போட்டிகள் **"சங்கமிப்போம் சமத்துவம் படைப்போம்"** என்ற மையக்கருத்தின் அடிப்படையில் நடைபெற்றது. அதுபோன்று இவ்வாண்டிற்கான கலைத்திருவிழா போட்டிகள், மாணவர்களிடையே சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வளப்படுத்துதல் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் **"சூழல் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு"** என்ற மையக்கருத்தின் அடிப்படையில் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்**
**வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு."**

என்ற திருவள்ளுவரின் குறளின்படி, ஆற்று நீரும், ஊற்று நீரும், அதை வாய்க்க செய்யும் மலையும், பருவத்தே வரும் மழை நீரும், வல்லமையான அரணும்

www.Padasalai.Net

ஒரு நாட்டின் வளத்திற்கு அவசியமானவை என்ற கருத்தின் அடிப்படையில், நம் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து அவற்றை முறையாக பராமரித்து பசுமையாக்கி வருங்கால தலைமுறையினரும் பயன்படுத்திட வேண்டும் என்ற உயர்வான எண்ணத்தினை மாணவர்களிடையே வளர்த்திடும் நோக்கத்தில், இக்கல்வியாண்டில் **"சூழல் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு"** என்ற மையக்கருத்தின் அடிப்படையிலேயே இவ்வாண்டிற்கான கலைத்திருவிழா போட்டிகள் நடைபெறும்.

## கலைத்திருவிழா 2024-25 – பிரிவுகள்

2024-25 ஆம் ஆண்டிற்கான கலைத்திருவிழா போட்டிகள் பின்வருமாறு ஐந்து பிரிவுகளில் நடைபெறும்.

| பிரிவு | வகுப்புகள் |
|---|---|
| பிரிவு 1 | 1 மற்றும் 2 ஆம் வகுப்பு |
| பிரிவு 2 | 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை |
| பிரிவு 3 | 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை |
| பிரிவு 4 | 9 மற்றும் 10 ஆம் வகுப்பு |
| பிரிவு 5 | 11 மற்றும் 12 ஆம் வகுப்பு |

## கலைத்திருவிழா 2024-25 – போட்டிகள்

### பிரிவு 1 : 1 & 2 ஆம் வகுப்புகள்

| வ.எண். | வகுப்பு | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|---|
| 1 | I & II | ஒப்புவித்தல் போட்டி – மழலையர் பாடல் (தமிழ்) Tamil Rhymes including ஆத்திச்சூடி | 3 நிமிடங்கள் |
| 2 | I & II | கதை கூறுதல் | 5 நிமிடங்கள் |
| 3 | I & II | வண்ணம் தீட்டுதல் | 60 நிமிடங்கள் |
| 4 | I & II | Recitation – Rhymes (English) | 3 நிமிடங்கள் |
| 5 | I & II | மாறுவேடப் போட்டி | 3 நிமிடங்கள் |

www.Padasalai.Net

## பிரிவு 2 : 3, 4 & 5 ஆம் வகுப்புகள்

| வ.எண். | வகுப்பு | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|---|
| 1 | III, IV & V | பேச்சுப் போட்டி | 3 நிமிடங்கள் |
| 2 | III, IV & V | திருக்குறள் ஒப்புவித்தல் | 3 நிமிடங்கள் |
| 3 | III, IV & V | மெல்லிசை – தனிப்பாடல் | 5 நிமிடங்கள் |
| 4 | III, IV & V | தேச பக்தி பாடல்கள் | 5 நிமிடங்கள் |
| 5 | III, IV & V | களிமண் பொம்மைகள் | 60 நிமிடங்கள் |
| 6 | III, IV & V | மாறுவேடப் போட்டி | 3 நிமிடங்கள் |
| 7 | III, IV & V | நாட்டுப்புற நடனம் (குழு) | 5 நிமிடங்கள் |
| 8 | III, IV & V | பரத நாட்டியம் (குழு) | 5 நிமிடங்கள் |

## பிரிவு 3 : 6, 7 & 8 ஆம் வகுப்புகள்

**வகை – 1: கவின்கலை / நுண்கலை**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 1. | ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | 45 நிமிடங்கள் |
| 2. | களிமண் சுதை வேலைப்பாடு | 90 நிமிடங்கள் |
| 3 | மணல் சிற்பம் | 90 நிமிடங்கள் |

**வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 4 | செவ்வியல் இசை – தனிப்பாட்டு | 5 நிமிடங்கள் |
| 5 | நாட்டுப்புற பாடல் – தனிப்பாட்டு | 5 நிமிடங்கள் |
| 6 | வில்லுப்பாட்டு – குழு (1 + 4 பேர்) | 10 நிமிடங்கள் |

www.Padasalai.Net

வகை – 3: நடனம்

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 7 | கிராமிய நடனம் – குழு (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 8 | பரதநாட்டியம் – குழு (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |

வகை – 4: நாடகம்

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 9 | தனி நபர் நடிப்பு | 5 நிமிடங்கள் |
| 10 | நகைச்சுவை வழங்குதல் | 5 நிமிடங்கள் |
| 11 | பலகுரல் பேச்சு | 5 நிமிடங்கள் |

## பிரிவு 4: 9 & 10 ஆம் வகுப்புகள்)

வகை – 1: கவின்கலை / நுண்கலை

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 1. | பானை ஓவியம் | 60 நிமிடங்கள் |
| 2. | களிமண் சிற்பம் | 60 நிமிடங்கள் |
| 3. | மணல் சிற்பம் | 60 நிமிடங்கள் |
| 4. | காகிதக்கூழ் பொருள்கள்<br>செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பொருள்கள்) | 90 நிமிடங்கள் |

வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 5. | நாட்டுப்புற பாடல் (Folk) – தனி | 5 நிமிடங்கள் |
| 6. | வில்லுப்பாட்டு – குழு (1 + 4 பேர்) | 10 நிமிடங்கள் |
| 7. | செவ்வியல் இசை (Traditional /Classical) – தனி | 5 நிமிடங்கள் |

வகை – 3: கருவி இசை – தோற் கருவி

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 8. | பம்பை / உருமி / உடுக்கை | 5 நிமிடங்கள் |
| 9. | பறை | 5 நிமிடங்கள் |
| 10. | மிருதங்கம் / தபேலா/ தவில்/ கடம் | 5 நிமிடங்கள் |
| 11. | டிரம்ஸ் (Triple Drum / Drums) | 5 நிமிடங்கள் |

www.Padasalai.Net

**வகை – 4: கருவி இசை – துளை – காற்றுக் கருவிகள்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 12. | நாதஸ்வரம் | 5 நிமிடங்கள் |
| 13. | புல்லாங்குழல் | 5 நிமிடங்கள் |
| 14. | ஹார்மோனியம் (Harmonium) | 5 நிமிடங்கள் |
| 15. | கீ போர்டு (Keyboard) | 5 நிமிடங்கள் |

**வகை – 5: கருவி இசை – தந்திக் கருவிகள்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 16. | வயலின் (Violin) | 5 நிமிடங்கள் |
| 17. | வீணை / விசித்திர வீணை அல்லது கோட்டு வாத்தியம் | 5 நிமிடங்கள் |
| 18. | கிட்டார் (Guitar)/ மாண்டலின் (Mandolin) | 5 நிமிடங்கள் |

**வகை – 6: நடனம்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 19. | நாட்டுப்புற நடனம் – தனி | 5 நிமிடங்கள் |
| 20. | நாட்டுப்புற நடனம் – குழு (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 21. | பரதநாட்டியம்– தனி | 5 நிமிடங்கள் |
| 22. | பரதநாட்டியம் – குழு (4 –9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 23. | பிறவகை நடனம் (free style) – குழு (4 –9 பேர்) | 5 நிமிடங்கள் |

**வகை – 7: நாடகம்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 24. | தெருக்கூத்து – குழு(4–8 பேர்) | 10 நிமிடங்கள் |
| 25. | வீதி நாடகம் – குழு(4–8 பேர்) | 10 நிமிடங்கள் |
| 26. | தனிநபர் நடிப்பு | 5 நிமிடங்கள் |
| 27. | பல குரல் பேச்சு(Mimicry) | 5 நிமிடங்கள் |
| 28. | இலக்கிய நாடகம் – குழு (5 பேர்) | 10 நிமிடங்கள் |
| 29. | பாவனை நடிப்பு (Miming) – தனி | 5 நிமிடங்கள் |
| 30. | பொம்மலாட்டம் – குழு (4–8 பேர்) (தோற்பாவை, மரப்பாவை, நிழற்பாவை) | 10 நிமிடங்கள் |

## பிரிவு 5 : (11 & 12 ஆம் வகுப்புகள்)

### வகை – 1: கவின்கலை / நுண்கலை

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 1. | பானை ஓவியம் | 60 நிமிடங்கள் |
| 2. | களிமண் சிற்பம் | 60 நிமிடங்கள் |
| 3. | மணல் சிற்பம் | 60 நிமிடங்கள் |
| 4. | காகிதக்கூழ் பொருள்கள்<br>செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பொருள்கள்) | 90 நிமிடங்கள் |

### வகை – 2: இசை (வாய்ப்பாட்டு)

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 5. | நாட்டுப்புற பாடல் (Folk) | 5 நிமிடங்கள் |
| 6. | வில்லுப்பாட்டு – குழு (1 + 4 பேர்) | 10 நிமிடங்கள் |
| 7. | செவ்வியல் இசை (Traditional /Classical) | 5 நிமிடங்கள் |

### வகை – 3: கருவி இசை – தோற் கருவி

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 8. | பம்பை / உருமி / உடுக்கை | 5 நிமிடங்கள் |
| 9. | பறை | 5 நிமிடங்கள் |
| 10. | மிருதங்கம் / தபேலா/ தவில்/ கடம் | 5 நிமிடங்கள் |
| 11. | டிரம்ஸ் (Triple Drum / Drums) | 5 நிமிடங்கள் |

### வகை – 4: கருவி இசை – துளை – காற்றுக் கருவிகள்

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 12. | நாதஸ்வரம் | 5 நிமிடங்கள் |
| 13. | புல்லாங்குழல் | 5 நிமிடங்கள் |
| 14. | ஹார்மோனியம் (Harmonium) | 5 நிமிடங்கள் |
| 15. | கீ போர்டு (Keyboard) | 5 நிமிடங்கள் |

### வகை – 5: கருவி இசை – தந்திக் கருவிகள்

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 16. | வயலின் | 5 நிமிடங்கள் |
| 17. | வீணை / விசித்திர வீணை அல்லது கோட்டு வாத்தியம் | 5 நிமிடங்கள் |
| 18. | கிட்டார் (Guitar)/ மாண்டலின் (Mandolin) | 5 நிமிடங்கள் |

**வகை – 6: நடனம்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 19. | நாட்டுப்புற நடனம் – தனி | 5 நிமிடங்கள் |
| 20. | நாட்டுப்புற நடனம் – குழு (4 – 9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 21. | பரதநாட்டியம் – தனி | 5 நிமிடங்கள் |
| 22. | பரதநாட்டியம் – குழு (4 –9 பேர்) | 5 நிமிடங்கள் |
| 23. | பிறவகை நடனம் (free style) குழு (4 –9 பேர்) | 5 நிமிடங்கள் |

**வகை – 7: நாடகம்**

| வ.எண் | போட்டிகள் | கால அளவு |
|---|---|---|
| 24. | தெருக்கூத்து – குழு (4–8 பேர்) | 10 நிமிடங்கள் |
| 25. | வீதி நாடகம் – குழு (4–8 பேர்) | 10 நிமிடங்கள் |
| 26. | தனிநபர் நடிப்பு | 5 நிமிடங்கள் |
| 27. | பல குரல் பேச்சு (Mimicry) | 5 நிமிடங்கள் |
| 28. | இலக்கிய நாடகம் – குழு (5 பேர்) | 10 நிமிடங்கள் |
| 29. | பாவனை நடிப்பு (Miming) தனி | 5 நிமிடங்கள் |
| 30. | பொம்மலாட்டம் (தோற்பாவை, மரப்பாவை, நிழற்பாவை)– குழு (4–8 பேர்) | 10 நிமிடங்கள் |

**பள்ளி அளவிலான போட்டிகள் நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

- அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ/ மாணவியரை ஊக்கப்படுத்தி இவ்வாண்டிற்கான கலைத்திருவிழா போட்டிகளில் பெரும்பான்மையான மாணவர்களை பங்கு பெறச்செய்தல் வேண்டும்.
- கலைத்திருவிழா போட்டிகளில் பங்குபெறுவதற்காக மாணவர்களிடமிருந்து எந்தவிதமான கட்டணமும் வசூலிக்கப்படக் கூடாது.
- கலைத்திருவிழா போட்டிகளை திட்டமிட்டு நடத்துவதற்கு, பள்ளியளவில் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், கலையார்வலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளிட்ட ஒரு கலைத்திருவிழா அமைப்புக் குழுவினை உருவாக்கி இக்கலைத்திருவிழா போட்டிகளை பள்ளியளவில் ஒரு சிறப்பு நிகழ்வாக நடத்திட வேண்டும்.
- அரசுப் பள்ளிகளுக்கான போட்டிகள், அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்கான போட்டிகள் தனித்தனியாக நடைபெறுதல் வேண்டும்.

- ❖ பள்ளி அளவில் நடைபெறும் கலைத்திருவிழாவில் பெற்றோர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகளின் முழுமையான ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் பெறுதல் இன்றியமையாதது.
- ❖ போட்டிகளில் நடுவர்களாக பணிபுரிய உரிய கலைப்பிரிவின் வல்லுநர்களைக் கண்டறிந்து, கலைத்திருவிழா அமைப்புக் குழுவினரிடம் கலந்தாலோசித்து நடுவர் பட்டியல் ஒன்று தயார் செய்து அதற்கான முன் அனுமதியை வட்டாரக் கல்வி அலுவலர்/ மாவட்டக்கல்வி அலுவலர்களிடமிருந்து பள்ளியின் தலைமை ஆசிரியர் பெற வேண்டும். இந்த பட்டியலில் இருந்து தான் நடுவர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.
- ❖ போட்டிகளுக்கான மதிப்பீடு செய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.
- ❖ பள்ளி அளவிலான அனைத்து போட்டிகளும் **"சூழல் பாதுகாப்பு அனைவரின் பொறுப்பு"** என்ற மையக்கருத்தின் அடிப்படையிலேயே குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.
- ❖ மாணவ, மாணவிகளுக்கென தனித்தனியாக போட்டிகள் நடைபெறாது. ஆண், பெண் பாகுபாடின்றி பொதுப் போட்டியாக நடைபெறும்.
- ❖ ஒருவர் எவையேனும் 3 தனிப் போட்டிகள் மற்றும் இரண்டு குழுப்போட்டிகளில் மட்டுமே பங்குபெற முடியும்.
- ❖ ஒவ்வொரு போட்டிக்கும், அந்தந்த போட்டிக்கான நடுவர்கள் எடுக்கும் முடிவே இறுதியானது.

**EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல்**

- ❖ ஒவ்வொரு போட்டியிலும் பங்கு பெறும் மாணவரின் விவரங்களை சேகரித்து பள்ளி அளவில் போட்டி வாரியாக போட்டிகள் நடைபெறுவதற்கு முன்பாகவே EMIS – ல் பதிவு செய்தல் வேண்டும்.
- ❖ ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களின் விவரங்களை போட்டி வாரியாக EMIS–ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.
- ❖ பள்ளி அளவில் நடைபெறும் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடத்தில் வெற்றிபெறும் தனிநபர்/குழு மட்டுமே வட்டார அளவில் நடைபெறும் போட்டியில் பங்கு பெற தகுதி பெறுவர்.
- ❖ EMIS தளத்தின் தரவுகள் உள்ளீடு செய்யும் பணிகள் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

www.Padasalai.Net

❖ சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவ மாணவியர்கள் (CWSN) பெரும்பான்மையான அளவில் இக்கலைத்திருவிழா போட்டிகளில் பங்குபெறுவதை உறுதிசெய்தல் வேண்டும். மொத்தமாக உள்ள 21 வகையான குறைபாடுகளுள், கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள சில வகை மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு மட்டும் ஒரு சில போட்டிகள் தனியாக நடைபெறும். இப்போட்டிகளை சார்ந்த பள்ளிக்கான சிறப்பு பயிற்றுநர் பள்ளி தலைமையாசிரியருடன் இணைந்து நடத்துதல் வேண்டும். அட்டவணையில் குறிப்பிடப்படாத குறைபாடுள்ள மாணவர்களை ஊக்குவித்து மற்ற மாணவர்களுடன் இணைந்து அனைத்துப் போட்டிகளிலும் பங்குபெறச் செய்தல் வேண்டும்.

| வ.எண். | வகுப்பு | போட்டிகள் | குறைபாடு வகை | கால அளவு |
|---|---|---|---|---|
| 1 | I to II | வண்ணம் தீட்டுதல் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 2 | I & II | மாறுவேடப் போட்டி | ID, ASD,CP | 03 நிமிடங்கள் |
| 3 | III, IV & V | களிமண் பொம்மைகள் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 4 | III, IV & V | மாறுவேடப் போட்டி | ID, ASD,CP | 03 நிமிடங்கள் |
| 5 | VI, VII & VIII | ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | ID, ASD,CP | 45 நிமிடங்கள் |
| 6 | VI, VII & VIII | களிமண் சுதை வேலைப்பாடு | ID, ASD,CP | 90 நிமிடங்கள் |
| 7 | VI, VII & VIII | மணல் சிற்பம் | ID, ASD,CP | 90 நிமிடங்கள் |
| 8 | IX & X | பானை ஓவியம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 9 | IX & X | களிமண் சிற்பம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 10 | IX & X | மணல் சிற்பம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 11 | IX & X | காகிதக்கூழ் பொருள்கள் செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பொருள்கள்) | ID, ASD,CP | 90 நிமிடங்கள் |
| 12 | XI & XII | பானை ஓவியம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | XI & XII | களிமண் சிற்பம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 14 | XI & XII | மணல் சிற்பம் | ID, ASD,CP | 60 நிமிடங்கள் |
| 15 | XI & XII | காகிதக்கூழ் பொருள்கள் செதுக்குச் சிற்பம் (காய்கறி / சோப்பு / மெழுகு / சுண்ணக்கட்டி போன்ற பொருள்கள்) | ID, ASD,CP | 90 நிமிடங்கள் |

- ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்கள் அனைவரும் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள போட்டிகளில் பங்கேற்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுள்ள மாணவர்களுக்கான போட்டிகள் அவர்களின் சூழலுக்கு ஏற்றவாறு பள்ளி அளவிலோ அல்லது பள்ளி ஆயத்தப் பயிற்சி மையத்திலோ நடத்தப்பட வேண்டும். இப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் விவரங்களை அவர்கள் பயிலும் பள்ளியின் தலைமையாசிரியர் EMIS–ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.
- போட்டிகளில் பங்கேற்கும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் படைப்புகளின் புகைப்படம் மற்றும் காணொலி (video) சார்ந்த பள்ளி தலைமையாசிரியரின் மூலம் EMIS–தளத்தில் கட்டாயமாக பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- வட்டார அளவில் BLC–உறுப்பினர்கள் சேர்ந்து ஒவ்வொரு பிரிவின்கீழ் உள்ள ஒவ்வொரு போட்டியிலும் முதல் ஐந்து இடங்களை பிடிக்கும் மாணவர்களை தேர்வு செய்து அடுத்த நிலைப்போட்டியான மாவட்ட அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுத்து EMIS–ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.
- மாவட்ட அளவில் ஒரு நடுவர் குழு அமைத்து (உதவித்திட்ட அலுவலர், IE மாவட்ட ஒருங்கிணைப்பாளர், ஒரு நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர், ஒரு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், ஒரு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்) மாவட்ட அளவில் ஒவ்வொரு பிரிவின்கீழ் உள்ள ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவர்களை

தேர்வு செய்து அடுத்த நிலைப்போட்டியான மாநில அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுத்து EMIS–ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.

| பொறுப்பாளர் | போட்டி நடைபெறும் நாட்கள் | EMIS–ல் பதிவேற்றம் | | | கண்காணிப்பு அலுவலர்கள் |
|---|---|---|---|---|---|
| | | பங்கேற்பாளர் விவரங்கள் **உள்ளீடு செய்தல்** | பங்கேற்பாளர் விவரங்கள் **உள்ளீடு செய்வதற்கான கடைசி நாள்** | வெற்றியாளர்கள் விவரங்கள் **உள்ளீடு செய்வதற்கான கடைசி நாள்** | |
| சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் | 22.08.2024 முதல் 30.08.2024 வரை | 19.08.24 முதல் 21.08.24 வரை | 21.08.2024 | 03.09.2024 | 9 முதல் 12ஆம் வகுப்பிற்கு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்.<br><br>1 முதல் 8 ஆம் வகுப்பு வரை சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர். வட்டார வளமைய மேற்பார்வையாளர் மற்றும் சார்ந்த ஆசிரியர் பயிற்றுநர் |

மேற்கூறியவாறு, கலைத் திருவிழா போட்டிகள் தற்பொழுது பள்ளி அளவில் நடைபெறும். அதன் தொடர்ச்சியாக நடைபெறவிருக்கும் வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் பின்னர் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களால் கல்விசாரா செயல்பாடுகளில் மாணவர்களின் அனைத்து வகையான கலைத்திறன்களை வெளிக்கொணரும் வகையில் எடுக்கப்பட்ட இந்த நல்லதொரு வாய்ப்பினை, அந்தந்த பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பயன்படும் விதமாக மாணவர்களை ஊக்கப்படுத்தி, ஒவ்வொரு மாணவரும் குறைந்தது ஒரு போட்டியிலாவது பங்குபெறச்செய்வது சார்ந்த பள்ளி தலைமையாசிரியரின் பொறுப்பாகும்.**

மேற்குறிப்பிட்டவாறு, கலைத்திருவிழா போட்டிகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களின் பங்கேற்பினை உறுதி

செய்ய பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறும், அதனை தொடர் ஆய்வின் வாயிலாக உறுதிசெய்யுமாறும் அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| **ஒம்/-** | **ஒம்/-** | **ஒம்/-** |
| **இயக்குநர்** | **இயக்குநர்** | **மாநில திட்ட இயக்குநர்** |
| **தொடக்க கல்வி** | **பள்ளிக் கல்வி** | **ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி** |

**இணைப்பு :**

**1.மேல் முறையீட்டு மன்றம்**

**2. கலைத்திருவிழா 2024 – 25 – பொதுவான விதிமுறைகள்**

**3.கலைத்திருவிழா 2024–25 –மதீப்பீடு செய்வதற்கான விதிமுறைகள்**

**4. கலைத்திருவிழா 2024–25 மேல் முறையீட்டிற்கான விண்ணப்பம்**

**5. கலைத்திருவிழா 2024–25 –மேல் முறையீட்டு மன்றம் வழங்கும் தீர்ப்பு**

**6.கலைத்திருவிழா 2024–25 (நடுவர் / மேல்முறையீட்டு மன்ற உறுப்பினர்களுக்காக)**

**பெறுநர்:**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்:**

1. அரசு செயலாளர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 09.
2. உறுப்பினர் செயலர், மாதிரிப் பள்ளிகள், சென்னை – 06.

**மாநில திட்ட இயக்குநருக்காக**

www.Padasalai.Net

## இணைப்பு

### 1. கலைத்திருவிழா 2024 – 25 – மேல் முறையீட்டு மன்றம்

- போட்டியின் முடிவுகள் பற்றி மேல்முறையீடு செய்வதற்கான மேல்முறையீட்டு மன்றம் அமைக்கப்பட வேண்டும். மேல்முறையீட்டு மன்றம் ஒரு கலை இனத்தின் நுட்பம், அது சார்ந்த சிறப்புக் கூறுகளைக் கருத்திற் கொண்டே இறுதி முடிவு எடுக்க வேண்டும்.
- **மறுமதிப்பீடு – மறுமேடையேற்றம் போன்ற செயல்கள் அனுமதிக்கப்படமாட்டாது.** பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பத்தில் தான் மேல்முறையீடு செய்தல் வேண்டும். மேலும் இறுதி தீர்ப்பும் அதற்குரிய படிவத்தில் மட்டுமே தெரிவிக்கப்பட வேண்டும்.
- முறையீடு செய்தவருக்கு சாதகமாக தீர்ப்பளிக்கப்பட்டால் செலுத்தப்பட்டத் தொகை திருப்பித் தரப்படும். இல்லையெனில், செலுத்திய தொகை திருப்பித் தரப்பட மாட்டாது.
- மேல்முறையீட்டுக் குழுவின் முடிவே இறுதியானது. மேல்முறையீடு செய்த ஒரு குழு மேல்முறையீட்டாளர் குழுவின் பரிந்துரை அல்லாமல் அடுத்த கட்ட போட்டியில் கலந்து கொள்ள முடியாது.
- ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் போட்டியாளர்களைக் கையாள்வதற்காக 5 பேர் கொண்ட ஒழுக்கக் குழு அமைக்கப்பட வேண்டும். அதில் மகளிர் ஒருவரும் இடம் பெற வேண்டும்.
- **பள்ளிகளுக்கான மேல்முறையீட்டு மன்றம்:** மாவட்டக் கல்வி அலுவலரின் தலைமையின் கீழ், கலை வல்லுநர்கள் இருவர் மற்றும் இரு கல்வித்துறை அலுவலர்கள் அடங்கிய ஐந்து பேர் கொண்ட பள்ளிகளுக்கான மேல்முறையீட்டு மன்றம் அமைக்கப்பட வேண்டும். ஒரு <u>கல்வி மாவட்டத்திற்கு ஒரு மேல்முறையீட்டு மன்றம்</u> அமைக்கப்பட்டு பள்ளிகளில் இருந்து பெறப்படும் மேல்முறையீடுகளை ஆய்வு செய்யும் பணியினை இம்மன்றம் மேற்கொள்ள வேண்டும்.
- **பள்ளியில் போட்டிகள் நடந்து முடிந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு, ஒரு மணி நேரத்திற்குள்ளாக ரூபாய் 500 கட்டணம் செலுத்தி மேல் முறையீடு அந்தந்த பள்ளியிலேயே செய்தல் வேண்டும்.**
- இதற்கான படிவத்தில்தான் மேல்முறையீடு செய்யப்படல் வேண்டும். மேல்முறையீடு மன்றம் ஐந்து நாளுக்குள்ளாக அல்லது வட்டார அளவிலான போட்டிக்கு முன்பாக மேல்முறையீட்டை விசாரித்து தீர்ப்பு வழங்கிட வேண்டும்.
- முறையீட்டின் தீர்ப்பு – போட்டியாளர்களுக்கு சாதகமாக இருந்தால் அவர் கட்டிய தொகை திருப்பித் தரப்பட வேண்டும்.
- மேல்முறையீட்டுக் குழுத்தலைவரின் பதவி, தொடர்பு எண் ஆகிய விவரங்கள் போட்டி நடைபெறும் இடங்களில் இடம் பெறச் செய்தல் வேண்டும்.

## 2. கலைத்திருவிழா 2024 – 25 – பொதுவான விதிமுறைகள்

- எழுதுதல் சார்ந்த போட்டிக்குத் தாள்கள் (Paper) மட்டுமே வழங்கப்படும். பிற பொருள்கள் அனைத்தையும் போட்டியாளர் கொண்டு வர வேண்டும்.
- போட்டிகளுக்கான தலைப்புகளை மையக் கருத்தின் அடிப்படையில் நடுவர்களே தீர்மானிப்பர்.
- செவ்வியல் இசைக்கு (Classical Music) சுதிப்பெட்டி பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் போட்டியாளர்கள் தமக்கு பிடித்த ராகத்தில் பாட அனுமதியுண்டு.
- கிராமிய நடனங்களில் அதற்கேற்ற கிராமிய தன்மை சார்ந்த உடைகளையே அணிதல் வேண்டும். மிகை ஒப்பனையான அலங்கார ஆடைகளை அணிதல் கூடாது.
- கிராமிய நடனம் / பரதநாட்டியம் / குழு நடனம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்ட இசை / பாடல்களைப் (CD / Pen Drive) பயன்படுத்திக் கொள்ளலாம்.
- பின்புலப் பங்கேற்பாளர் / பின்னிசை இசைப்போர் யாவரும் அந்தந்த பிரிவு/ வகைக்கான வயதுடையவர்களாகவே இருக்க வேண்டும்.
- பாரம்பரியமாகப் பழக்கத்தில் உள்ள கலை வடிவங்களைப் படைக்கும் போது பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ராகம், தாளம் தவிர புதிய ராகம், புதிய தாளம் மற்றும் மிகைப்படியான நாட்டிய அசைவுகள் முதலியன அனுமதிக்கப்பட மாட்டாது.
- ஓரங்க நாடகம் அல்லது ஒரு நீண்ட நாடகத்தின் ஏதேனும் ஓர் அங்கம் 10 மணித்துளிகளுக்குள்ளாக படைப்பதற்கு அனுமதிக்கப்படும். 5 பேர் மேடையிலும், மேடையின் பின் 3 பேர் என 8 பேர் மட்டுமே ஓர் அணியில் இடம்பெற முடியும். பின்னணி இசைக்கு (ஒளிப்பதிவு நாடா) பயன்படுத்தலாம். குழுப்பாடல் / தேசபக்தி பாடல் ஆகியவற்றில் மாணவன், மாணவி கலந்த அணி அனுமதிக்கப்படும். தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு கொண்ட பாடல்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.
- பாரம்பரியக் கருவிகள், உபகரணங்கள் (குத்துவிளக்கு, செப்புக்குடம்) எவையேனும் தேவைப்படின் அவற்றைப் போட்டியாளர்கள் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். குழுவாக படைக்கப்படும் கலை இனங்களில் குழுவில் பங்கு கொள்ளும் அனுமதிக்கப்பட்ட அனைவருக்கும் (தகுதி இருப்பின்) சான்றிதழும், பரிசும் வழங்கப்பட வேண்டும்.
- செவ்வியல் இசை (வாய்ப்பாட்டு), செவ்வியல் இசைக்கருவி பாடல் மற்றும் இவை போன்ற கலை வடிவங்களைப் போட்டி இனங்களில் இடம்பெறாதவை என இனம் காணப்பட்டால் அவற்றைக் காட்சிப்படைப்பாக படைக்கலாம்.

www.Padasalai.Net

போட்டியின் விதிகளுக்கு இவை உட்படாது. மேலும் போட்டியின் தகுதித் தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

- நடுவர்களை நியமிப்பதில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். போதுமான தகுதியும் அனுபவமும் நிறைந்தவரே நடுவராகத் தகுதியுடையவராகக் கருதப்படுவார். நடுவரை நியமிப்பதில் உள்ள நெறிமுறை, விதிமுறை யாவும் முற்றிலுமாகக் கடைபிடிக்கப்பட வேண்டும்.
- ஒவ்வொரு கலை இனத்திற்கும் கட்டாயமாக 3 நடுவர் நியமிக்கப்பட வேண்டும். மூவரும் தனித்தனியாக அமர்ந்து பிறரைக் கலந்தாலோசிக்காமல் தமது மதிப்பீட்டை மதிப்பெண்ணாகப் பதிவு செய்தல் வேண்டும். ஒருவர் இடும் மதிப்பெண் மற்றவருக்குத் தெரியக்கூடாது.
- நடுவர்களின் மதிப்பீடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு (மூன்று மதிப்பெண்களும் கூட்டப்பட்டு அதன் சராசரி காணப்படும்) நடுவரின் அடிப்படையில்தான் முடிவுகள் அமையும். ஒரே மதிப்பெண்ணை இருவர் பெற்றிருந்தால் – (Tie Breaker) நடுவர்களை கலந்து இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும்.
- முடிவுகள் யாவும் அறிவிக்கப்படும் முன் மந்தனமாக (இரகசியமாக) வைக்கப்பட வேண்டும்.
- கலையினங்களுக்கான நடுவராக / மேல்முறையீட்டு மன்ற உறுப்பினராக செயல்படுபவர்கள் உறுதிமொழிச் சான்றினை பூர்த்தி செய்து அளித்தல் அவசியம்.

## 3.கலைத்திருவிழா 2024–25 –மதீப்பீடு செய்வதற்கான விதிமுறைகள்

| வாய்ப்பாட்டு – செவ்வியல் இசை | |
|---|---|
| குரல் | 20 மதிப்பெண்கள் |
| சுதி | 20 மதிப்பெண்கள் |
| லயம் | 20 மதிப்பெண்கள் |
| பாடலின் வரி சுத்தம் | 20 மதிப்பெண்கள் |
| கற்பனை சுரம் | 20 மதிப்பெண்கள் |

| கருவி இசை (காற்றிசைக் கருவி): | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண்கள் |
| லயம் | 25 மதிப்பெண்கள் |
| பாவம் | 25 மதிப்பெண்கள் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண்கள் |

| கருவி இசை (தந்தி இசைக் கருவி): | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண்கள் |
| லயம் | 25 மதிப்பெண்கள் |
| பாவம் | 25 மதிப்பெண்கள் |
| கற்பனை சுரம் | 25 மதிப்பெண்கள் |

| கருவி இசை : (Percussion type) (தோல் கருவிகள்) | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண்கள் |
| லயம் | 25 மதிப்பெண்கள் |
| இசைக்கும் தன்மை | 25 மதிப்பெண்கள் |
| பாட்டுக்கு வாசிக்கும் முறை (Presntation) | 25 மதிப்பெண்கள் |

| செவ்வியல் நடனம் | |
|---|---|
| தாளம் | 20 மதிப்பெண்கள் |
| பாவம் | 20 மதிப்பெண்கள் |
| அங்க சுத்தம் | 20 மதிப்பெண்கள் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண்கள் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |

www.Padasalai.Net

| தனிப் பாடல்கள் | |
|---|---|
| சுதி | 25 மதிப்பெண்கள் |
| தாளம் | 25 மதிப்பெண்கள் |
| ஒலிப்புமுறை மற்றும் கருத்து | 25 மதிப்பெண்கள் |
| பாவம் (மெய்ப்பாடு) | 25 மதிப்பெண்கள் |

| கிராமிய நடனம் | |
|---|---|
| பக்கவாத்தியங்கள் – பாரம்பரிய இசைக்கருவிகளுடன் | 20 மதிப்பெண்கள் |
| வகைமைக்கு ஏற்ற ஆட்ட அடவுகள் | 20 மதிப்பெண்கள் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண்கள் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |
| தாளம் | 20 மதிப்பெண்கள் |

| வில்லுப்பாட்டு | |
|---|---|
| சுதி | 20 மதிப்பெண்கள் |
| லயம் / தாளம் | 20 மதிப்பெண்கள் |
| மொழிச் சுத்தம் | 20 மதிப்பெண்கள் |
| கருத்து வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |
| இசை, ஒருங்கமைப்பு (குழுச் செயல்பாடு) | 20 மதிப்பெண்கள் |

| ஓவியம் / வரைந்து வண்ணம் தீட்டுதல் | |
|---|---|
| வரைவின் நேர்த்தி | 20 மதிப்பெண்கள் |
| சீரான வண்ணப்பூச்சு | 20 மதிப்பெண்கள் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 20 மதிப்பெண்கள் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 20 மதிப்பெண்கள் |
| ஒளியும் நிழலும் | 20 மதிப்பெண்கள் |

| மாறுவேடப் போட்டி | |
|---|---|
| வேடப் பொருத்தம் | 25 மதிப்பெண்கள் |
| நடிப்புத் திறன் | 25 மதிப்பெண்கள் |
| பேச்சாற்றல் | 25 மதிப்பெண்கள் |
| மேடை ஆளுகை (அச்சமின்மை) | 25 மதிப்பெண்கள் |

| கதைக் கூறுதல் | |
|---|---|
| கதைக்கரு | 25 மதிப்பெண்கள் |
| உடல் மொழி | 25 மதிப்பெண்கள் |
| உச்சரிப்பு | 25 மதிப்பெண்கள் |
| இயல்பு தன்மை | 25 மதிப்பெண்கள் |

| குழு நடனம் (அனைத்து வகைக் குழு நடனங்களும்) | |
|---|---|
| ஆடுபவர்களின் ஒத்திசைவு | 20 மதிப்பெண்கள் |
| ஒப்பனை மற்றும் உடையலங்காரம் | 20 மதிப்பெண்கள் |
| நடன வெளிப்பாடு | 20 மதிப்பெண்கள் |
| வகைமைக்கு ஏற்ற அடவுகள் | 20 மதிப்பெண்கள் |
| பக்க வாத்தியங்கள் பாரம்பரிய இசைக்கருவிகள் | 20 மதிப்பெண்கள் |

| நாடகம் (Drama / வீதி நாடகம்) | |
|---|---|
| கதைக்கரு | 20 மதிப்பெண்கள் |
| நடிப்பு ஒருங்கிணைப்பு | 20 மதிப்பெண்கள் |
| குரல் எடுப்பு | 20 மதிப்பெண்கள் |
| இயக்கம் | 20 மதிப்பெண்கள் |
| உடல் மொழி | 20 மதிப்பெண்கள் |

| பொம்மலாட்டம் | |
|---|---|
| பொம்மைகளின் நேர்த்தி | 25 மதிப்பெண்கள் |
| சொல்லும் கருத்து | 25 மதிப்பெண்கள் |
| தாளம் / பாடல் வளம் | 25 மதிப்பெண்கள் |
| பொம்மை இயக்கத்தின் நேர்த்தி | 25 மதிப்பெண்கள் |

| நகைச்சுவை வழங்குதல் (யாரையும் புண்படுத்துவதாக அமையக்கூடாது) | |
|---|---|
| நகைச்சிறப்பு | 25 மதிப்பெண்கள் |
| பாவம் (மெய்ப்பாடு) | 25 மதிப்பெண்கள் |
| நடிப்பு உடல் மொழி | 25 மதிப்பெண்கள் |
| கற்பனை | 25 மதிப்பெண்கள் |

| பலகுரல் (Mimicry) | |
|---|---|
| கருத்து | 25 மதிப்பெண்கள் |
| போலச் செய்தல் திறன் (Mimicry) | 25 மதிப்பெண்கள் |
| உடல் மொழி | 25 மதிப்பெண்கள் |
| குரல் வளம் | 25 மதிப்பெண்கள் |

| தனியாள் / பாவன நடிப்பு: (Mono Act / Miming) | |
|---|---|
| கதை | 25 மதிப்பெண்கள் |
| உடல்மொழி | 25 மதிப்பெண்கள் |
| உரையாடும் திறன் | 25 மதிப்பெண்கள் |
| மேடை ஆளுஷ்மைத் திறன் | 25 மதிப்பெண்கள் |

| வண்ணம் தீட்டுதல் (கொடுக்கப்படும் படத்தில்) | |
|---|---|
| சீரான வண்ணப்பூச்சு | 25 மதிப்பெண்கள் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 25 மதிப்பெண்கள் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 25 மதிப்பெண்கள் |
| ஒளியும் நிழலும் | 25 மதிப்பெண்கள் |

| ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுதல் | |
|---|---|
| வரைவின் நேர்த்தி | 20 மதிப்பெண்கள் |
| சீரான வண்ணப்பூச்சு | 20 மதிப்பெண்கள் |
| சுற்றுக் கோட்டிற்கு உள்ளேயே தீட்டுதல் | 20 மதிப்பெண்கள் |
| பொருள் சார்ந்த வண்ணம் | 20 மதிப்பெண்கள் |
| ஒளியும் நிழலும் | 20 மதிப்பெண்கள் |

| மாறுவேடப் போட்டி | |
|---|---|
| வேடப் பொருத்தம் | 25 மதிப்பெண்கள் |
| நடிப்புத் திறன் | 25 மதிப்பெண்கள் |
| பேச்சாற்றல் | 25 மதிப்பெண்கள் |
| மேடை ஆளுகை (அச்சமின்மை) | 25 மதிப்பெண்கள் |

| கதைக் கூறுதல் | |
|---|---|
| கதைக்கரு | 25 மதிப்பெண்கள் |
| உடல் மொழி | 25 மதிப்பெண்கள் |
| உச்சரிப்பு | 25 மதிப்பெண்கள் |
| இயல்பு தன்மை | 25 மதிப்பெண்கள் |

www.Padasalai.Net

10. மதிப்பீடு செய்வதற்கான விதிமுறைகள் விளக்கப்படாத கலையினங்கள் எவையேனும் இருப்பின் அவற்றிற்கான மதிப்பீடு முறைகள் இங்கே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு விதிமுறைகளுக்கு ஏற்ப, வடிவமைக்கப்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் முன் அனுமதியினைப் பெறவேண்டும். மேலும், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்ககத்தின் முன் அனுமதி இன்றி எந்தவொரு மதிப்பீட்டு முறையையும் மாற்றியமைக்க அனுமதி இல்லை.

## 4. கலைத் திருவிழா 2024-25 – மேல் முறையீட்டிற்கான விண்ணப்பம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பங்கு பெற்ற மாணவர் பெயர் | : | |
| 2. | பள்ளியின் பெயர் | : | |
| 3. | மாவட்டத்தின் பெயர் | : | |
| 4. | பங்குகொண்ட கலை இனம் | : | |
| 5. | அரங்கத்தின் பெயர் மற்றும் எண் | : | |
| 6. | பதிவு எண். | : | |
| 7. | குறியீட்டு எண் (Code No) | : | |
| 8. | போட்டி நடைபெற்ற பள்ளி / கல்வி மாவட்டம் /மாவட்டம் / மாநில நிலை | : | |
| 9. | போட்டியில் பெற்ற நிலை | : | |
| 10. | போட்டி நடைபெற்ற நாள் மற்றும் நேரம் | : | |
| 11. | முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம் | : | |
| 12. | மேல் முறையீட்டிற்கான காரணம் | : | |
| 13. | போட்டியாளரின் கையொப்பம் | : | |
| 14. | பொறுப்பு ஆசிரியரின் பெயர் மற்றும் கையொப்பம் | : | |
| 15. | மேல் முறையீடு செய்த நாள் மற்றும் நேரம் | : | |

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும் (For the Office use only)

1. மேல் முறையீட்டு எண் :
2. மேல்முறையீட்டுற்கான தொகை :
3. மேல்முறையீடு பற்றி விரிவாக எடுத்துக் கூறுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நேரம் :
4. குறிப்புகள் (தீர்ப்பு பற்றி) :

கையொப்பம்
தலைவர் மேல்முறையீட்டு மன்றம்
பள்ளி / வட்டாரம் / மாவட்டம் / மாநிலம்

--------
(ஊர்ப் பெயர்)

www.Padasalai.Net

5. கலைத்திருவிழா 2024-25 - மேல் முறையீட்டு மன்றம் வழங்கும் தீர்ப்பு

பொருள் :

பார்வை :

உத்தரவு எண்: -------- -- நாள்: ------------

போட்டியாளர் முன்வைத்த முறையீடு :

மேல்முறையீட்டு மன்றத்தின் கருத்து :

மேல்முறையீட்டின் - தீர்ப்பு :

தலைவர்
மேல்முறையீட்டு மன்றம்
பள்ளி / வட்டாரம் / மாவட்டம் / மாநிலம்
---------
(ஊர்ப் பெயர்)

போட்டியாளர் பெயர் மற்றும் முகவரி:

www.Padasalai.Net

6, கலைத்திருவிழா 2024-25 - (நடுவர் / மேல்முறையீட்டு மன்ற உறுப்பினர்களுக்காக)

## உறுதி மொழி

தமிழகம் பள்ளிக் கலைத் திருவிழா 2024-25ல் - என் மகன், மகள், என் மாணவர் என் உறவினர் என யாரும் நான் நடுவராக / மேல்முறையீட்டு மன்ற உறுப்பினராக இருக்கும் கலை நிகழ்ச்சியில் / மேல்முறையீட்டின் விசாரணையில் இடம் பெறவில்லை என உறுதியாகக் கூறுகிறேன்.

**நாள்:** **கையொப்பம்:**

**இடம் :** **பெயர்:**

**குறிப்பு:** தேவையற்ற தொடரைக் கோடிட்டு நீக்குக.

மாநில திட்ட இயக்குநருக்காக